ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த
# கண்ணிநுண்சிறுத்தாம்பு
# ஏழாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு ஏழாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

கண்டுகொண்டென்னைக் காறிமாறப்பிரான்
பண்டைவல்வினை பாற்றி அருளினான்
எண்திசையும் அறியவியம்புகேன்
ஒண்தமிழ் சடகோபனருளையே

அர்த்தம்:
காரியின் திருக்குமாரரான மாறன், எனக்குத் தலைவராய் என்னைக் கடாக்ஷித்தும் கைக்கொண்டும் என்னுடைய அனாதியான பாவங்களை அழிந்து போகச் செய்தார். அழகிய தமிழ் பாசுரங்களுக்கு இருப்பிடமான சடகோபனுடைய அருளை எட்டுத் திசையில் இருக்கும் அனைவரும் அறியும்படி சொல்லுவேன்.

வ்யாக்யான சாரம்:
தம்முடைய சகல வினைகளையும் போக்கிய நம்மாழ்வாருடைய எல்லையற்ற அருளை எல்லாவிடத்திலும் எல்லா காலத்துக்கும் ப்ரசித்தியாக்குவேன் என்று மதுரகவி ஆழ்வார் கூறுகிறார். நம்மாழ்வார் இவர் தன்மையைப் பாராமல் அனுக்ரஹித்த விஷயத்தை எல்லோரும் அறியும்படி சொல்வேன் என்கிறார்.

கண்டுகொண்டென்னை:
எம்பெருமான் நம்மாழ்வாரைக் கண்டு கொண்டிருப்பதைப் போல ("இருந்தான் கண்டு கொண்டு") இவரை நம்மாழ்வார் கண்டு கொண்டிருந்தார் என்கிறார்.

என்னை:
இப்படி பலன் எதிர்பாராமல் நம்மாழ்வார் உபகரித்தும் அதற்கு ப்ரதியாக ஒன்றும் செய்யாத என்னை என்கிறார்.

காரிமாறப்பிரான்:
நம்மாழ்வாருக்கு எம்பெருமான் பிரான் ஆனதைப் போல ("பிரான் பெருநிலங்கீண்டவன்") இவருக்கு நம்மாழ்வார் பிரான் ஆனார். அவர் செய்த உபகாரத்தினால் பிரான் என்கிறார். நம்மாழ்வாருக்கு உபகாரகரான எம்பெருமான் வரையில் போகாமல் இருக்கும் வண்ணம், நம்மாழ்வார் இவருக்கு பிரான் ஆனார்.

பண்டைவல்வினை பாற்றி:
இவ்வினைகள் ஆதி இல்லாதவை ஆகையாலே அவற்றுக்குத் தொடக்கம் சொல்ல இயலாது. இருந்தும், அவற்றுக்கு முதல் உண்டு என்று ஆனதைப் போல் அவற்றுக்கு முடிவு தந்தார் நம்மாழ்வார். அனுபவத்தினால் மட்டுமே போகக் கூடிய இவ்வினைகளை நம்மாழ்வார் தாமாகவே போக்கினார். அனாதி காலமாக ப்ராயச்சித்தம் அனுபவம் இரண்டினாலும் போகாத வினைகளைப் போக்கினார் நம்மாழ்வார்.

பாற்றியருளினான்:
அவ்வினைகள் தம்மையும் தொடராமல் பிறரையும் அடையாமல் ("த்விஷந்த: பாபக்ருத்யம்") உருத்தெரியாத வண்ணம் அழித்தார் நம்மாழ்வார் என்கிறார்.

அருளினான்:
நம்மாழ்வாருக்கு எம்பெருமான் மயர்வற மதிநலம் அருளியதைப்போல் இவருக்கு நம்மாழ்வார் அருள் செய்தார்.

எண்டிசையுமறியவியம்புகேன்:
ஒரு வித்யாசமுமின்றி ஒருவரையும் ஒன்றையும் விடாமல் எல்லோரும் எல்லாமும் அறியும் வகையில் சொல்லுகிறார் ("தொண்டீர் எல்லீரும் வாரீர்").

ஒண்டமிழ்:
பெரும் ஆழத்திலே மறைந்து கிடந்த பொருள்களை எல்லாம், எல்லோரும் காணும் வகையில் வெளியே வைத்த ஒள்ளிய தமிழ். யாருக்கும் புலப்படாமல் கிடந்த விஷயத்தை ("யதோ வாசோ நிவர்தந்தே") எல்லோரும் அறியும் வண்ணம் வைத்த தமிழ்.

சடகோபனருளையே:
எம்பெருமான் மயர்வற மதிநலம் அருளிய போது அதற்கும் அகப்படாமல் கிடந்த தம்மை நம்மாழ்வார் அருள் அங்கீகரித்தது என்கிறார். எம்பெருமான் அளித்த

மயர்வற மதிநலம் போல் அல்ல நம்மாழ்வாருடைய அருள். அவன் அருளையும் அடையப் பெறாத தமக்கு இவ்வருள் கிட்டியது என்கிறார்.

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்